<u>சுருக்கம்</u>

புதிய திட்டம் - "கலைஞர் வீட்டு வசதித் திட்டம்'' - 2010-2011- செயல்படுத்துவது – நிதி ஒதுக்கீடு - திட்ட காலத்தின் முழுமைக்கும் ''கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தினை'' செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மாஅதி1) துறை

அரசு ஆணை (நிலை) எண். 68 நாள் :14.06.2010

படிக்கப்பட்டவை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின்
கடித எண்.16263/KVVT/2010, நாள் 19.05.2010.

- - - - -

<u>ஆணை :</u>

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 06.01.2010 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் உரையாற்றுகையில் தமிழகத்தில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்துக் குடிசை வீடுகளையும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்றும் "கலைஞர் வீட்டு வசதித் திட்டம்" எனும் ஒரு புதிய திட்டம் 2010-11 முதல் 2015-16 வரையிலான 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என அறிவிப்பு செய்தார்கள். இதன் மூலம், 2016-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே ''குடிசைகள் இல்லாத'' முதல் மாநிலம் என்னும் பெருமையை தமிழ்நாடு பெறும்.

2. 26.4.2010-ஆம் நாளன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2010-11 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்துப் பேசும் பொழுது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் "கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 2010-2011-ஆம் ஆண்டில் 3 இலட்சம் குடிசை வீடுகள் – வீடு ஒன்றுக்கான அலகுத் தொகை ரூபாய் 60,000/- என்ற அளவில், ரூபாய் 1,800 கோடி மொத்த செலவில் நிலையான கான்கிரீட் வீடுகளாகக் கட்டித் தரப்படும்" என்றும் அறிவிப்பு செய்துள்ளார்கள்.

3. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தினை 2010-2011-ஆம் ஆண்டு செயல்படுத்துவதற்கும் மற்றும் திட்டச் செயலாக்க காலத்தின் முழுமைக்கும் செயல்படுத்துவதற்குறிய வரைவு வழிகாட்டு நெறிமுறைகளையும், ஒவ்வொரு நிதியாண்டிலும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியில், நான்கில் ஒரு பகுதியினை முதல் காலாண்டில் பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களுக்கு அனுமதியும், அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரை கூட்டுநராகக் (Convenor) கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட

குழுவின் (Empowered Committee) இசைவினைப் பெற்றபின் 2, 3 மற்றும் 4-ஆம் காலாண்டுத் தவணைத் தொகையினைப் பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரமும் அளித்து ஆணையிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்களின் செயற்குறிப்பினை நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து கீழ்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

(i) ஊரகப் பகுதியில் தகுதியுள்ள ஓலைக் கூரை வேயப்பட்ட அனைத்துக் குடிசைகளையும் கான்கீரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்ற “கலைஞர் வீட்டு வசதித் திட்டம்” 2010-11 முதல் 2015-16 வரை ஆறு ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தப்படும்.

(ii) 2010-11-ஆம் நிதி ஆண்டில், 3 இலட்சம் குடிசை வீடுகள், கான்கிரீட் மேற்கூரைகளுடன் கூடிய நிலையான வீடுகளாக, அலகுத் தொகை ரூ.60,000/- வீதம், கட்டித் தரப்படும். இதற்காக, 2010-11ஆம் நிதியாண்டில் ரூ.1,800 கோடி ( ரூபாய் ஆயிரத்து எண்ணூறு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

(iii) திட்டச் செயலாக்க காலத்தின் முழுமைக்கும் ‘‘கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தினைச்” செயல்படுத்துவதற்கான அரசால் ஒப்புதலளிக்கப்பட்ட விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

(iv) கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்கு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் வருடாந்திர நிதியினை கீழ்கண்டவாறு காலாண்டிற்கு ஒரு முறை பெற்று அந்நிதியினை மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(அ) ஒவ்வொரு நிதியாண்டிலும் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீட்டின் நான்கில் ஒரு பகுதியை, முதல் காலாண்டு நிதியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தாமாகவே பெறுவார்.

(ஆ) 2வது, 3வது மற்றும் 4வது காலாண்டிற்கான நிதியை, அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், ஆகியோர் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பெறுவார். இவ்வதிகாரமளிக்கப்பட்ட குழுவின் கூட்டுநர் (convenor) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநராவார்.

5. மேலே பத்தி 4 (ii)-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| (i) | 4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 – ஊரக வீட்டு வசதி 789 – ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JA சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>16 – பெரும் பணிகள் (த.தொ.கு.4216-03-789-JA-1607) | ரூ. 780.00 |
| (ii) | 4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு - 03 ஊரக வீட்டு வசதி 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JA – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின்கீழ் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>16 – பெரும் பணிகள் (த.தொ.கு.4216-03-796-JA-1602) | ரூ. 20.00 |
| (iii) | 4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டு வசதி 800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் JA – கலைஞர் வீட்டு வசதித் திட்டம்<br>16 – பெரும் பணிகள் (த.தொ.கு.4216-03-800-JA-1601) | ரூ. 1000.00 |
| | மொத்தம் | ரூ.1800.00 கோடி |

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.109/DS(B)/2010, நாள் 10-06-2010-ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை -15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)

சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – **35.**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.**1**) துறை, சென்னை–**9**
<u>நகல்</u>
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – **9.**
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – **9.**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – **9.**
நிதி (ஊவ) துறை, சென்னை – **9.**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

<u>murhiz (ãiy) v©.68, C.t (k) C (kh.m.Â1) Jiw, ehŸ 14.06.2010</u>

**<u>இணைப்பு</u>**

**<u>கலைஞர் வீட்டு வசதித் திட்டம் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

**1. முன்னுரை :**

**2001** ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் தற்காலிக வீடுகளில் (அதாவது சுவர் மற்றும் கூரைகள் தற்காலிகமானது) வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 23% ஆகும். இது தேசிய அளவிலான 18% விடக் கூடுதலாக உள்ளது. தமிழகத்தில், இத்தற்காலிகக் கூரை வீடுகளால் ஏற்படும் இன்னல்கள் நகர்புறங்களை (**1/10** கூரை வீடுகள்) ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஊரகப்பகுதிகளில் (**1/3** கூரை வீடுகள்) மிக அதிகமாக உள்ளது. கடந்த **25** ஆண்டுகளில், மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் "இந்திரா நினைவு குடியிருப்புத்" திட்டத்தின் கீழ் நிலையான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இதே திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் மீதமுள்ள அனைத்துக் குடிசைகளையும் நிலையான வீடுகளாக மாற்றியமைக்க வேண்டுமாயின் இதற்கு மேலும் முப்பதாண்டுகள் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், இவ்வரசு **100** சதவீதம் மாநில அரசின் நிதி உதவியுடன், ஊரகப் பகுதிகளிலுள்ள குடிசைகள் அனைத்தையும் கான்கீரிட் மேற்கூரைகளுடன் கூடிய நிலையான வீடுகளாக மாற்றி

அமைத்து பயனாளிகளுக்கு இலவசமாக வழங்கிடும் மிகப்பெரிய திட்டத்தை வடிவமைத்துள்ளது.

தமிழக சட்டசபையில் 6.1.2010இல் மாநில ஆளுநர் உரையின் போது "கலைஞர் வீட்டு வசதித் திட்டம்" தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது. 2010–11 முதல் 2015–16 வரையிலான 6 ஆண்டு காலத்தில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் குடிசைகளையும் நிரந்தர வீடுகளாக மாற்றி அமைத்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன் மூலம் 2016இல் இந்தியாவிலேயே குடிசைகள் இல்லாத முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழும்.

**2. இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள் :**

(i) குடிசையின் சுவர் எத்தன்மையதாக இருப்பினும், ஓலைக் கூரை வேயப்பட்ட அனைத்துக் குடிசைகளையும் ஆறாண்டுகளில் நிரந்தர வீடுகளாக மாற்றிட இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும்.

(ii) நிரந்தர வீடுகள், தற்பொழுது குடிசைகள் உள்ள இடத்திலேயே கட்டப்படும்; இத்திட்டத்திற்கென நிலம் ஏதும் கையகப்படுத்தப்பட மாட்டாது. தங்கள் மனைக்கு நில உடமை ஆவணம் வைத்துள்ளவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளாகத் தேர்ந்தெடுக்கப்படத் தகுதியுடையவர்கள் ஆவர். புறம்போக்கு நிலத்தில் அமைந்துள்ள குடிசைகளைப் பொருத்தமட்டில், அப்புறம்போக்கு நிலம் ஆட்சேபணையற்ற புறம்போக்காகவும், மேற்படி ஆக்கிரமிப்பு வருவாய்த் துறை அதிகாரிகளால் வரன்முறைப் படுத்தக்கூடியதாகவும் அமையுமாயின், அத்தகைய புறம்போக்குப் பகுதிகளில் உள்ள குடிசைகள் மட்டுமே கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிலையான வீடாக மாற்றி அமைக்க இயலும்.

(iii) கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில் கீழ்க்காணும் குடிசைகள் நிலையான வீடுகளாக மாற்றிடத் தகுதியற்றவையாகும்.

- வாடகைக்கு குடியிருப்பவர்கள் குடிசைகள்.

- வணிக ரீதியிலான உபயோகத்திற்காக அல்லது விலங்குகள் அடைத்திட அமைக்கப்பட்ட குடிசைகள்.
- குடிசையின் ஒருபகுதி மட்டும் ஓலைக் கூரை வேயப்பட்டதாகவும், மற்றொரு பகுதி சிமெண்ட் கான்கிரீட்/ஓடு/ஆஸ்பெஸ்டாஸ் / உலோகத் தகட்டினால் வேயப்பட்ட கூரைகளாகவும் உள்ள குடிசைகள்.
- சிமெண்ட் கான்கிரீட்/ஓடு/ஆஸ்பெஸ்டாஸ்/உலோகத் தகட்டுக் கூரையின் மீது ஓலை வேயப்பட்ட குடிசைகள்.
- குடிசையில் குடியிருக்கும் உறுப்பினர்களில் எவருக்கேனும் வேறு நிலையான வீடு இருப்பின், அத்தகைய குடிசைகள்.
- பணியாற்றி ஓய்வு பெற்ற அல்லது பணிபுரியும் அரசுப் பணியாளர் (முழு நேரம்/பகுதிநேரம்/ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம்/தினக்கூலி அடிப்படையில் பணி நியமனம்) மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்/ பொதுத் துறை நிறுவனங்கள்/வாரியங்கள்/அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் இதர அரசு உதவி பெறும் நிறுவனங்களின் பணியாளர் அல்லது அவரது கணவன்/மனைவி ஆகியவர்களின் குடிசைகள், ஏதும் இருப்பின்.
- பாராளுமன்ற உறுப்பினர்/சட்டமன்ற உறுப்பினர்/உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அல்லது அவரது கணவன்/மனைவி பெயரில் உள்ள குடிசைகள், ஏதும் இருப்பின்.
- 1.1.2010க்கு பிறகு கட்டப்பட்ட குடிசைகள், ஏதும் இருப்பின்.

(IV) **கணக்கெடுப்பு மற்றும் மேலாய்வு**

புதிதாக ஓலைக் கூரைக் குடிசைகள் அமைத்து ஒருவரே பல்வேறு பயன்களை அபகரிக்க வாய்ப்புள்ளதால், ஆரம்ப கட்டத்திலேயே பயனாளிகள் பட்டியலை இறுதி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே, இத்திட்டத்தின் கீழ், மாநிலத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் உள்ள அனைத்துக் குடிசைகளையும் கணக்கெடுப்பு செய்து, கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிலையான வீடு அமைத்துத் தர வேண்டிய குடிசைகளின் எண்ணிக்கையை விரைந்து மதிப்பிட முடிவெடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக கடந்த பிப்ரவரி 2010இல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கிராம ஊராட்சி என்ற அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம ஊராட்சிகளில் முன்னோடிக் கணக்கெடுப்பு (Pilot Survey) மேற்கொள்ளப்பட்டது.

முன்னோடிக் கணக்கெடுப்பின் மூலமாகப் பெறப்பட்ட அனுபவங்கள், 26.01.2010இல் தலைமைச் செயலாளர் நிகழ்த்திய கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் 4.03.2010இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் கணக்கெடுப்புப் படிவத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. பின்னர், குடிசைகள் கணக்கெடுப்பு, கணக்கெடுப்புகளின் மேலாய்வு, முதன்மைப் பயிற்றுனர்களால் கணக்கெடுப்புப் பதிவேடுகளைச் சரிபார்க்கும் முறை, கலைஞர் வீட்டு வசதித் திட்டம் குறித்த இணைய தளத்தில் புள்ளிவிவரங்களைப் பதிவு செய்தல், சரிபார்ப்பு மற்றும் விண்ணப்பப் படிவம் தயாரித்தல், இரண்டாம் சுற்றுக் களப் பார்வையிட்டு புகைப்படங்கள் எடுத்தல், மற்றும் பதிவுருக்களைத் தாக்கல் செய்தல் போன்ற பணிகள் குறித்த விரிவான அறிவுரைகள் கீழ்க்காணும் இணைப்பு I, II மற்றும் III-இன் மூலமாக வழங்கப்பட்டன (குடிசைகளின் கணக்கெடுப்பு தர்மபுரி தவிர அனைத்து மாவட்டங்களிலும் 29.03.2010இல் துவங்கப்பட்டது. தருமபுரி மாவட்டத்தில் 12.04.2010இல் கணக்கெடுப்பு துவங்கப்பட்டது):–

**இணைப்பு I :** அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9–இன் நேர்முகக் கடிதங்கள் (அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் முகவரியிடப்பட்டது)

நே.மு.க. எண் 1719/மா.அ.தி –1 /2010 நாள் 08.03.2010
நே.மு.க. எண் 1719/மா.அ.தி – 1 /2010 நாள் 09.03.2010

நே.மு.க எண் 1719/மா.அ.தி–1 / 2010 நாள் 22.04.2010

**இணைப்பு II :** ஓலைக் கூரை வேயப்பட்ட குடிசைகளின் கணக்கெடுப்புக்கான படிவம் (தொகுப்புகளுடன்).

**இணைப்பு III :** கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் குடிசைகளின் கணக்கெடுப்புப் பணியாளர்களுக்கான அறிவுரைகள் மற்றும் மேலாய்வு அதிகாரிகளுக்கான அறிவுரைகள்.

மேற்காணும் அறிவுரைகளுக்கும், வழிகாட்டு நெறிமுறைகளுக்கும் அரசின் பின்னேற்பு ஆணைகள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள தகுதியுடைய பயனாளிகளின் பட்டியல் தகவலுக்காக கிராமசபை முன்பு வைக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தகுதியுள்ள குடிசைகளில் தவறுதலாக விடுபட்ட குடிசைகள், அல்லது தவறுதலாகச் சேர்க்கப்பட்ட தகுதியற்ற குடிசைகள் குறித்த புகார்களுக்கு தீர்வு காணும் முறை குறித்த அறிவுரைகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களால் தனியாக வழங்கப்படும்.

**3. கிராம ஊராட்சிகளுக்கான நிலையான வீடுகளின் ஒதுக்கீடு :**

(i) மாநிலத்தில் குடிசைகள் குறித்த கணக்கெடுப்பு முடிவுற்ற கிராம ஊராட்சிகளில், இத்திட்டம் செயல்படுத்தப்படும். கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மாநிலத்திலுள்ள ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் செய்யப்படும் ஒதுக்கீடு இரண்டு பாகங்களைக் கொண்டதாக இருக்கும்.

(அ) *நிலையான பாகம்,* அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுடன் ஆலோசித்த பின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், அவர்களால் நிர்ணயிக்கப்படும். (ஆ) *மாறுபாடுடைய பாகம்*, இத்திட்டத்தின் கீழ் நிதி ஆண்டின் இலக்கின் மீதமுள்ள வீடுகளின் ஒதுக்கீட்டை, ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் தகுதியுள்ள குடிசைகளின் விகிதாசார அடிப்படையில் பகிர்ந்து அளித்து நிர்ணயிக்கப்படும்.

(ii) மாநிலம் முழுவதிலும் உள்ள கிராம ஊராட்சிகளில், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 1 முதல் 100க்கும் மேற்பட்டவை வரை குக்கிராமங்களுடன், சராசரியாக சுமார் 8 குக்கிராமங்கள் உள்ளன. அனைத்துக் குக்கிராமங்களிலும் ஒரே நேரத்தில் கட்டுமானப் பணிகள் துவங்குவதென்பது விரும்பத்தக்கதல்ல. ஏனெனில் (அ) குக்கிராமவாரியாக மேற்கொள்ளப்படும் பணிகள் மிகக் குறைவானதாகவே இருப்பதால், திட்டத்தின் தாக்கம் குறைவாகவே இருக்கும். (ஆ) அனைத்துக் குக்கிராமங்களிலும் ( சுமார் 90,000க்கும் மேல்) திட்டச் செயலாக்கம் மற்றும் பணி மேற்பார்வையிடுதல் மிகவும் கடினமானதாக இருக்கும். இதற்கு மாறாக, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் உள்ள குக்கிராமங்களை, தகுதியுடைய குடிசைகளின் எண்ணிக்கை அடிப்படையில், “இறங்குமுகமாக” வரிசைப்படுத்தி, அதிகபட்ச எண்ணிக்கையில் தகுதியுள்ள குடிசைகள் உள்ள குக்கிராமங்களிலிருந்து துவங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட சில குக்கிராமங்களில் மட்டும்

நிரந்தர வீடுகள் கட்டும் பணியினைத் துவங்கலாம். பெரும்பாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு குக்கிராமத்திலும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களே இருப்பதால், திட்டச் செயல்பாட்டின் துவக்க காலங்களின்போது பல்வேறு இனங்களைச் சார்ந்த பயனாளிகள் எண்ணிக்கை சமமாக இல்லை என்ற விமர்சனத்திற்கு உட்பட வாய்ப்புள்ளது. இப்பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண ஒவ்வொரு கிராம ஊராட்சியின் ஒதுக்கீட்டையும், உள்ஒதுக்கீடு செய்ய கீழ்க்காணும் முறை பரிந்துரைக்கப்படுகிறது.

**4. கிராம ஊராட்சியின் பல்வேறு இனங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கிடையே நிலையான வீடுகளின் உள் ஒதுக்கீடு :**

**(i) பல்வேறு இனங்களுக்கிடையே உள்ஒதுக்கீடு:** இத்திட்டத்தின் பயன் அனைத்து இனத்தினருக்கும் சம அளவில் சென்றடைவதை உறுதி செய்ய, ஒவ்வொரு கிராம ஊராட்சியின் ஒதுக்கீட்டை இனவாரியாகப் பிரித்து (பழங்குடியினர் / ஆதி திராவிடர் / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் / இதரர்), ஒவ்வொரு இனத்தினருக்கும் கணக்கெடுப்பின்படி உள்ள தகுதியுடைய குடிசைகளின் எண்ணிக்கையின் விகிதாசார அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

(இது கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்கும், இந்திரா நினைவு குடியிருப்பு திட்டத்திற்கும் இடையே பயனாளி தேர்வில் உள்ள முக்கிய வேறுபாடாகும்).

***<u>உதாரணம் 1:</u>*** *ஒரு கிராம ஊராட்சி "அ", "ஆ", "இ" மற்றும் "ஈ" என்ற 4 குக்கிராமங்கள் உடையது.*

*அக்கிராம ஊராட்சியிலுள்ள தகுதியுடைய குடிசைகள்: **900;** அவற்றின் இனவாரியான பகிர்வு ஆதி திராவிடர் : **300,** மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் : **250,** பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் : **300,** இதர வகுப்பினர் : **50***

***2010–11**இல் அக் கிராம ஊராட்சிக்கு கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையான வீடுகள் எண்ணிக்கை **150** எனில், இவ்வொதுக்கீடு மேற்காணும் இனவாரியான மக்கள் தொகைக்கேற்ப **300:250:300:50** என்ற விகிதத்தில் பகிர்ந்து நிர்ணயிக்கப்பட வேண்டும். எனவே, இனவாரியான ஒதுக்கீடு அவ்வூராட்சியில் கீழ்கண்டவாறு அமையும்:–*

*ஆதிதிராவிட மொத்த வகுப்பினருக்கான ஒதுக்கீடு ஒதுக்கீடு* = *தகுதியுடைய ஆதிதிராவிடர் குடிசைகள்* x *கிராம ஊராட்சிக்கான நிலையான வீடுகளின்* / *கிராம ஊராட்சியில் உள்ள நிலையான வீடாக மாற்றத் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்*

$= \frac{300}{900} \times 150 = \mathbf{50}$

*மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு ஒதுக்கீடு* = *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்களின் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்* x *கிராம ஊராட்சிக்கான மொத்த நிலையான வீடுகளின்* / *கிராம ஊராட்சியில் உள்ள நிலையான வீடாக மாற்றத் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்*

$= \frac{250}{900} \times 150 = \mathbf{41.66}$ *அல்லது* $\mathbf{42}$

*பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான ஒதுக்கீடு ஒதுக்கீடு* = *பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்களின் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்* x *கிராம ஊராட்சிக்கான மொத்த நிலையான வீடுகளின்* / *கிராம ஊராட்சியில் உள்ள நிலையான வீடாக மாற்றத் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்*

$= \frac{300}{900} \times 150 = \mathbf{50}$

*இதர வகுப்பினை சேர்ந்தவர்களுக்கான மொத்த ஒதுக்கீடு ஒதுக்கீடு* = *இதர வகுப்பினை சேர்ந்தவர்களின் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்* x *கிராம ஊராட்சிக்கான நிலையான வீடுகளின்* / *கிராம ஊராட்சியில் உள்ள நிலையான வீடாக மாற்றத் தகுதியுடைய மொத்தக் குடிசைகள்*

$= \frac{50}{900} \times 150 = \mathbf{8.33}$ *அல்லது* $\mathbf{8}$

(ii) **“ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒவ்வொரு இனத்தினருக்கும் குக்கிராமங்களின் முன்னுரிமை பட்டியல்” இறுதி செய்தல் :** ஒரு கிராம ஊராட்சியில் உள்ள பல இனத்தைச்

சேர்ந்த குடிசைவாசிகள் (ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ பிற்படுத்தப்பட்டோர் மற்றும் இதரர்) ஒரு குக்கிராமத்திலோ அல்லது பல்வேறு குக்கிராமங்களிலோ பரவலாக இருக்க வாய்ப்புள்ளது. எனவே, ஒவ்வொரு இனத்தினைச் சேர்ந்தவர்களுக்கும் 2010 கணக்கெடுப்பு முடிவுகளின் அடிப்படையில், தனித்தனியே “முன்னுரிமை பட்டியல்” தயாரிக்கப்படும். இதற்கு ஒவ்வொரு இனத்திற்கும், தனித்தனியே, நிலையான வீடுகளாக மாற்றத் தகுதியுடைய குடிசைகளின் எண்ணிக்கையின் இறங்குமுகமாக, குக்கிராமங்களை வரிசைப்படுத்தி “முன்னுரிமைப் பட்டியல்” தயாரிக்கப்படும். திட்டச் செயலாக்கத்தில் கூடுதல் தெளிவையும், வெளிப்படைத் தன்மையையும், நிலைத் தன்மையையும் உறுதி செய்யும் நோக்கில் இந்த குக்கிராமவாரியான “முன்னுரிமைப் பட்டியல்” திட்டச் செயலாக்க காலத்தில் எந்த மாற்றமுமின்றி வைக்கப்பட்டிருக்கும். மிகச் சில நேர்வுகளில், நிபந்தனையுடன் தகுதியுடையவர்கள் ஆட்சேபணையற்ற புறம்போக்குகள் வரன்முறை செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்ட நிலையில் இத்திட்டத்தின் கீழ் தகுதியுடையவர்களாக மாறினாலும், முன்னுரிமைப் பட்டியலில் எந்தவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது.

பின்குறிப்பு – ஒரு குறிப்பிட்ட நிதியாண்டில் ‘நிபந்தனையுடன் தகுதியுடையவர்களாகக்’ கருதப்பட்டு பின் ‘தகுதியுடையவர்களாக’ மாறும் நேர்வுகள், அடுத்த நிதியாண்டு முதற்கொண்டு கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் (இத்திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள இதர நிபந்தனைகளுக்குட்பட்டு) நிலையான வீட்டினைப் பெறத் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். ஆயினும், ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒவ்வொரு இனத்தினருக்குமான குக்கிராம முன்னுரிமைப் பட்டியல் 2010–11ல் உள்ளபடி மாற்றங்கள் ஏதுமின்றி தொடர்ந்து திட்டச் செயலாக்க காலத்தின் முழுமைக்கும் செயல்படுத்தப்படும்.

(iii) **ஒவ்வொரு இனத்தினருக்கும் குக்கிராமங்களிடையே நிலையான வீடுகளின் உள்ஒதுக்கீட்டு முறை :** ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஒவ்வொரு பிரிவினருக்குமான குக்கிராமவாரியான “முன்னுரிமை பட்டியல்” நிர்ணயிக்கப்பட்டவுடன், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் நிலையான வீடுகளின் ஒதுக்கீடு, முன்னுரிமைப் பட்டியல் வரிசைப்படி முதல் குக்கிராமத்திற்கு ஒதுக்கப்படும் – அதாவது, அவ்வினத்தினரின் தகுதியுடைய குடிசைகள் அதிகபட்ச எண்ணிக்கையில் உள்ள குக்கிராமத்திற்கு ஒதுக்கப்படும். ஒரு வேளை, ஒரு குறிப்பிட்ட வகுப்பினைச் சார்ந்தவர்களின் தகுதியுடைய

குடிசைகள் ஒரு குக்கிராமத்தில் அவ்வகுப்பினருக்கு ஒதுக்கிடப்பட்ட நிலையான வீடுகளைக் காட்டிலும் குறைவானதாக இருப்பின், அக்குக்கிராமத்தைச் சேர்ந்த அனைத்து குடிசைகளும் நிலையான வீடுகளாக மாற்றப்படும். மீதமுள்ள ஒதுக்கீடு, அப்பிரிவினைச் சேர்ந்தவர்களின் குடிசைகள் அடுத்தபடியாக அதிகமாக உள்ள குக்கிராமத்திற்கு வழங்கப்படும்.

அடுத்த நிதியாண்டில், அக்குறிப்பிட்ட பிரிவினருக்கான ஒதுக்கீடு, முதலில், எந்த குக்கிராமத்தில் உள்ள குடிசைகளில் முந்தைய ஆண்டில் பகுதி மட்டுமே நிலையான வீடுகளாக மாற்ற எடுக்கப்பட்டனவோ, அக்குக்கிராமத்தில் மீதமுள்ள குடிசைகளையும் நிலையான வீடுகளாக மாற்றும் வகையில் ஒதுக்கீடு செய்யப்படும். அதன்பின், முன்னுரிமை அப்படையில் “உள்ஒதுக்கீடு” முறை தொடரும். இம்முறையானது, ஒரு கிராம ஊராட்சியிலுள்ள, தகுதியுடைய குடிசைகள் அனைத்தும் நிலையான வீடுகளாக மாற்றப்படும் வரை தொடரும்.

***<u>உதாரணம் : 2</u>***

*உதாரணம் 1ல் குறிப்பிடப்பட்டுள்ள கிராம ஊராட்சியில் உள்ள மொத்த தகுதி வாய்ந்த குடிசைகளின் எண்ணிக்கை 900. இதில் வகுப்புவாரியான, குக்கிராமவாரியன தகுதிவாய்ந்த குடிசைகளின் எண்ணிக்கை அட்டவணை –1 ன்படி : -*

***<u>அட்டவணை 1</u>***

| ***இனம்*** | ***2010–11 குக்கிராமவாரியாக நிரந்தர குடியிருப்பாக மாற்றத் தகுதியுடைய குடிசைகளின் எண்ணிக்கை*** | | | | |
|---|---|---|---|---|---|
| | ***குக்கிராமம் ‘அ’*** | ***குக்கிராமம் ‘ஆ’*** | ***குக்கிராமம் ‘இ’*** | ***குக்கிராமம் ‘ஈ’*** | ***கிராம ஊராட்சிக்கான மொத்த எண்ணிக்கை*** |
| *ஆதி திராவிட வகுப்பினர்* | ***150*** | *125* | *0* | *25* | *300* |
| *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்* | *0* | ***150*** | *50* | *50* | *250* |
| *பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்* | *55* | *75* | *80* | ***90*** | *300* |
| *இதரர்* | *0* | *0* | *0* | ***50*** | *50* |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ***அனைத்து பிரிவினருக்கு மான மொத்த எண்ணிக்கை*** | *205* | *350* | *130* | *215* | ***900*** |

*உதாரணம்–1இல் விளக்கப்பட்டுள்ளபடி **2010–11**க்கான ஒதுக்கீடு **150** ஆக இருக்குமானால், இனவாரியான பகிர்வு ஆதிதிராவிடர்–**50**, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–**42**, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–**50** மற்றும் இதரர் –**8** ஆகும்.*

- *ஆதிதிராவிடர் பிரிவினருக்கான குக்கிராமவாரியான முன்னுரிமைப் பட்டியலானது, முதலில் குக்கிராமம் “அ”வும், தொடர்ந்து, “ஆ” மற்றும் “ஈ” ஆகும். **2010–11**ஆம் ஆண்டில், “அ” குக்கிராமத்திற்கு **50** வீடுகள் ஒதுக்கப்படும், ஏனெனில் அதிகபட்ச, தகுதியுடைய குடிசைகளின் எண்ணிக்கையுடன், “அ” குக்கிராமம் முன்னுரிமைப் பட்டியலில் முதல் இடம் பெறுகிறது.*

- *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் குக்கிராமவாரியான முன்னுரிமைப் பட்டியலில் முதல் “ஆ”வினைத் தொடர்ந்து, “இ” மற்றும் “ஈ” இணைந்து இரண்டாம் இடத்திலுள்ளன. எனவே, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான **42** வீடுகள் **2010–11**ல் குக்கிராமம் “ஆ” விற்கு ஒதுக்கப்படும்.*

- *பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முன்னுரிமை குக்கிராம வரிசை பட்டியலில் முதலில் “ஈ” குக்கிராமம், தொடர்ந்து “இ”, “ஆ” மற்றும் “அ” ஆகியவையாகும். எனவே, **2010–11**ம் ஆண்டிற்கு இப்பிரிவினருக்கான **50** வீடுகள் “ஈ”குக்கிராமத்திற்கு வழங்கப்படும்.*

- *இதர பிரிவினருக்கான வீடுகள் அனைத்தும் “ஈ” பிரிவில் உள்ளன. எனவே, இதர பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட **8** வீடுகளும், “ஈ” குக்கிராமத்திற்கு ஒதுக்கப்படும்.*

*ஆக, **2010–11**இல், இனவாரியாகவும், குக்கிராமவாரியாகவும், **150** நிரந்தரக் குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு முடிவுற்ற பின்பு, **2011–12**ம் ஆண்டு துவக்கத்தில்,*

*நிலையான வீடுகளாக மாற்றத்தக்க குடிசைகளின் பகிர்மானத்தைப் பொறுத்த அளவில், **2011–12**ம் ஆண்டில் குக்கிராமவாரியன, இனவாரியான நிலை கீழ்கண்டவாறு இருக்கும்.*

***அட்டவனை –2***

| ***இனம்*** | ***ஒவ்வொரு குக்கிராமத்திலும் உள்ள நிரந்தரக் குடியிருப்பாக மாற்றத் தகுதியுடைய குடிசைகள் – 2011–12*** | | | | |
|---|---|---|---|---|---|
| | ***குக்கிராமம் 'அ'*** | ***குக்கிராமம் 'ஆ'*** | ***குக்கிராமம் 'இ'*** | ***குக்கிராமம் 'ஈ'*** | ***கிராம ஊராட்சிக்கான மொத்த எண்ணிக்கை*** |
| *ஆதி திராவிட வகுப்பினர்* | *150–50 =**100*** | *125* | *0* | *25* | *300–50 =250* |
| *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்* | *0* | *150–42 =**108*** | *50* | *50* | *250–42 =208* |
| *பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்* | *55* | *75* | *80* | *90–50 =**40*** | *300–50 =250* |
| *இதரர்* | *0* | *0* | *0* | *50–8 =**42*** | *50–8 =42* |
| ***அனைத்து பிரிவினருக்குமான மொத்த எண்ணிக்கை*** | *155* | *308* | *130* | *157* | ***750*** |

*கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் **2011–12**க்கான ஒதுக்கீடு மீண்டும் **150** ஆக இருக்குமானால், இனவாரியான பகிர்வு ஆதிதிராவிடர்–**50**, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–**42**, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்–**50** மற்றும் இதரர் –**8** ஆகும்.*

***2011–12**ஆம் ஆண்டினைப் பொறுத்தவரையில், **2010–11**இல் ஒரு குக்கிராமத்தில் குறிப்பிட்ட இனத்தினருக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளில், ஒரு பகுதி மட்டும் நிலையான வீடாகக் கட்டி முடிக்கப்பட்ட குக்கிராமங்களுக்கு முதலில் உள்ஒதுக்கீடு செய்யப்படும். மீதம் கட்டப்பட வேண்டிய வீடுகளின் ஒதுக்கீடு ஏதேனுமிருப்பின், குக்கிராம முன்னுரிமைப் பட்டியலின் வரிசைப்படி உள்ஒதுக்கீடு செய்யப்படும்.*

- *ஆதிதிராவிட வகுப்பினரைப் பொறுத்தவரையில், **2010–11**ம் ஆண்டில் ''அ'' குக்கிராமத்தில் ஒரு பகுதி மட்டுமே நிலையான வீடுகளாக மாற்றப்பட்டன. எனவே, **2011–12**க்கான "**50** நிலையான வீடுகள்" மீண்டும் குக்கிராமம் ''அ'' குக்கிராமத்திற்கு வழங்கப்படும்.*

- *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்தவரையில், **2010–11**ம் ஆண்டில் ''ஆ''குக்கிராமத்தில் ஒரு பகுதி மட்டுமே நிலையான வீடுகளாக மாற்றப்பட்டன. எனவே, **2011–12**க்கான ''**42** நிலையான வீடுகள்'' மீண்டும் ''ஆ'' குக்கிராமத்திற்கு வழங்கப்படும்.*

- *பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்தவரையில், **2010–11**ம் ஆண்டில் ''ஈ'' குக்கிராமத்தின் பணி பகுதி அளவே முடிவடைந்துள்ளது. எனவே, **2011–12**ல் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான **50** நிரந்தரக் குடியிருப்புகள் கீழ்கண்டுள்ளபடி ஒதுக்கப்படும். **(1)** ''ஈ'' குக்கிராமத்தில் **40** வீடுகள் ஒதுக்கப்பட்டு முழுமையடைந்தும், **(2)** மீதமுள்ள **10** வீடுகள் முன்னுரிமைப் பட்டியல்படி இரண்டாம் இடத்திலுள்ள ''இ'' குக்கிராமத்திற்கும் வழங்கப்படும்.*

- *இதர பிரிவினரைப் பொறுத்தவரையில், அப்பிரிவினரின் **42** குடிசைகளும் ''ஈ'' குக்கிராமத்தில் மட்டுமே உள்ளதால், **2011–12**ல் **8** வீடுகள் ''ஈ'' குக்கிராமத்திற்கே ஒதுக்கீடு செய்யப்படும்.*

*ஆதிதிராவிடர்களுக்கான வீடுகள் ''அ'' குக்கிராமம் முழுவதும் எடுத்து முடிக்கப்பட்ட பின்பே பின்வரும் ஆண்டில், (முன்னுரிமை பட்டியலில் **2**வது இடத்தில் உள்ள) ''ஆ'' குக்கிராமத்திற்கு உள்ஒதுக்கீடு செய்யப்படும். ''ஆ'' குக்கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகள் கட்டிமுடிக்கப்பட்ட பின்னரே, ''ஈ'' குக்கிராமத்தில் இப்பணி மேற்கொள்ளப்படும். அதுபோலவே, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வீடுகள், ''ஆ'' குக்கிராமத்தில் அனைத்து வீடுகளும் கட்டி முடிக்கப்பட்ட பின்பு, (முன்னுரிமைப் பட்டியல்படி இணைந்து **2**வது இடத்தில் உள்ளதால்) ''இ'' மற்றும் ''ஈ'' குக்கிராமங்களுக்கு சமமாக பிரித்தளிக்கப்படும்.*

**5. தேர்ந்தெடுக்கப்பட்ட குக்கிராமங்களில் பயனாளிகளை அடையாளம் காணுதல் :**

(i) பத்தி 4ல் விவரித்துள்ளபடி, ஒவ்வொரு இனத்தினருக்கும் பல்வேறு குக்கிராமங்களிடையே நிரந்தர வீடுகள் கட்டி தருவதற்கான உள்ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட்ட பின்பு, அடுத்தகட்டமாக, தகுதிவாய்ந்த பயனாளிகள் தேர்வு செய்யப்பட வேண்டும். கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தேர்வு செய்யும் முறை நியாயமானதாகவும், வெளிப்படையானதாகவும், தானியங்கியாகச் செயல்படக் கூடியதாகவும், தொடர்புடைய அனைவரும் எளிதில் புரிந்துக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(ii) இதனைக் கருத்தில் கொண்டு, கீழ்க்காணும் முறை பரிந்துரைக்கப்படுகிறது :

*ஒவ்வொரு குக்கிராமத்திற்குள்ளும், ஒரே பிரிவினைச் சேர்ந்த பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நிலையில், அன்னாரின் கதவிலக்கங்களின் 'ஏறுவரிசை' அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர். இப்பணிக்கு மே 2009 வாக்காளர் பட்டியலில் உள்ள, (கணக்கெடுப்புப் பதிவேட்டில் கலம் 5இல் நிரப்பப்பட்டுள்ளவாறு) புதிய கதவிலக்கங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.*

***<u>உதாரணம் 3</u> :*** *மேற்காணும் உதாரணம்–2இல் குக்கிராமம் 'ஈ'-இல் மே 2009 வாக்காளர் பட்டியல் அடிப்படையில் பல்வேறு பிரிவினருக்கான புதிய கதவிலக்கங்கள் (கணக்கெடுப்பு பதிவேட்டின் கலம் 5இல் பதியப்பட்டுள்ளபடி) கீழ்கண்டுள்ளபடி உள்ளன.*

- *ஆதிதிராவிட வகுப்பினர் கதவிலக்கம் 51 முதல் 75 (25 குடிசைகள்)*
- *மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கதவிலக்கம் 76 முதல் 125 (50 குடிசைகள்)*
- *பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் கதவிலக்கம் 26 முதல் 50, கதவிலக்கம் 151 முதல் 215 (90 குடிசைகள்)*
- *இதரர் கதவிலக்கம் 1 முதல் 25 மற்றும் கதவிலக்கம் 126 முதல் 150 (50 குடிசைகள்)*

*2010–11ல் "ஈ" குக்கிராமம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 50 வீடுகளும் இதர பிரிவினருக்கு 8 வீடுகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. (தயவுசெய்து அட்டவனை–1 மற்றும் அதன் கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்பினையும் காணவும்). <u>2010–11ல்</u>" "ஈ" குக்கிராமத்தில் நிரந்தரக் குடியிருப்பாக மாற்ற எடுத்துக் கொள்ளப்படும் தனிநபர் குடிசைகள் கீழ்காணுமாறு அமையும்.*

- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – கதவிலக்கம் 26 முதல் 50 (25 வீடுகள்) மற்றும் கதவிலக்கம் 151 முதல் 175 (25 வீடுகள்) – அதாவது மொத்தம் 50 வீடுகள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு.
- இதரர் – கதவிலக்கம் 1 முதல் 8 – 8 வீடுகள்.

2011–12ல் "ஈ" குக்கிராமத்தில் மீண்டும் 50 வீடுகள் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இதர பிரிவினருக்கு 8 வீடுகளும் ஒதுக்கப்படும். 2011–12இல் "ஈ" குக்கிராமத்தில் தனிநபர் குடிசைகள் நிரந்தர குடியிருப்பு மாற்றம் பின்வருமாறு இருக்கும் :

- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – கதவிலக்கம் 176 முதல் 215 வரை அதாவது 40 வீடுகள்.
- இதரர் – கதவிலக்கம் 9 முதல் 16 அதாவது 8 வீடுகள்.

இதே முறை இதர குக்கிராமங்களிலும் பின்பற்றப்படும்.

பின் குறிப்பு :– எளிதில் புரிந்து கொள்வதற்காக, உதாரணம்–3இல் கதவிலக்கங்கள் தொடர்ச்சியாக காட்டப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில், இத்திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட இனத்தினைச் சேர்ந்த நிலையான வீடாக மாற்றத் தகுதியுடைய குடிசைகள் தொடர்ச்சியாக இல்லாமல் இருக்கலாம், ஏனெனில், (1) ஒரு இனத்தைச் சார்ந்த அனைத்து நபர்களும் அடுத்தடுத்த கதவிலக்கங்களில் உள்ள வீடுகளில் வசிக்காமலிருக்கலாம் (2) ஒரு வேளை, ஒரே பிரிவினைச் சேர்ந்தவர்கள் அடுத்தடுத்த கதவிலக்கங்களில் வசித்தாலும், அவ்விலக்கங்கள் அனைத்தும் குடிசைகளாக இல்லாமல் இருக்கலாம், மற்றும் (3) அனைத்தும் குடிசைகளாக இருப்பினும், அனைத்து குடிசைகளும் நிலையான வீடாக மாற்றத் தகுதியுடையவைகளாக இல்லாமல் இருக்கலாம். தகுதியுடைய குடிசைகளின் புதிய கதவிலக்கங்கள் தொடர்ச்சியாக இல்லாவிட்டாலும், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தில் பயனாளிகளை தெரிவு செய்யும் முறை ஒன்றே – அதாவது புதிய கதவிலக்கங்களின் "ஏறு வரிசையில்" தேர்வு செய்யப்படும்.

(iii) மேற்காணும் பயனாளிகள் தேர்வு செய்யும் முறை, ஒரு குக்கிராமத்தில் புதிய கதவிலக்கங்கள் ஒரே தொடர்ச்சியாக 1 முதல் இறுதிவரை, அதாவது 1 முதல் 215 வரை அமையுமெனில் அதற்கு பொருந்தும். சில குக்கிராமங்களில் பலதரப்பட்ட தொடர்ச்சியாக கதவிலக்கங்கள் அமைய வாய்ப்புள்ளது. அதாவது கதவிலக்கம் 1 முதல் தொடங்கி அந்த தெருவில் உள்ள இறுதி கதவிலக்கம் வரை (ஒரு தொடராகவும்) இதே முறை அடுத்த

*தெருவிற்கும்/குக்கிராமத்தின் இதர குடியிருப்புகளுக்கும் அமைய வாய்ப்புள்ளது. உதாரணமாக, ஒரு குக்கிராமத்திலுள்ள 3 தெருக்களில் மொத்தமாக 100 வீடுகள் உள்ளன. முதல் தெருவில் 50 வீடுகள்–கதவிலக்கம் 1 முதல் 50 வரையும், இரண்டாம் தெருவில் 30 வீடுகள்– கதவிலக்கம் 1 முதல் 30 வரையும், மூன்றாம் தெருவில் 20 வீடுகள்–கதவிலக்கம் 1 முதல் 20 வரையும் இருக்கலாம். அத்தகைய நேர்வில், பல்வேறு குடிசைகளுக்கும் ஒரே கதவிலக்கம் இருக்க வாய்ப்புள்ள நிலையில், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வில், கீழ்க்காணும் முறை பின்பற்றப்பட வேண்டும்.*

1) ஒவ்வொரு இனத்திற்கும், ஒவ்வொரு குக்கிராமத்திலும், தெருவாரியான, தகுதியுடைய குடிசைகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

2) தகுதியுடைய குடிசைகள் அதிகபட்ச எண்ணிக்கையில் உள்ள தெருக்களுக்கு உள்ஒதுக்கீடு முதலில் வழங்கப்பட வேண்டும். அக்குறிப்பிட்ட தெருவில் குறிப்பிட்ட இனத்தினரின் தகுதியுடைய அனைத்து குடிசைகளும் நிலையான வீடுகளாக மாற்றப்பட்ட பின், மீதமுள்ள ஒதுக்கீடு அதே இனத்தைச் சேர்ந்தவர்களின் அடுத்த அதிகபட்ச தகுதிவாய்ந்த குடிசைகள் எண்ணிக்கை உள்ள தெருவிற்கு உள்ஒதுக்கீடு செய்யப்படும். இதே முறை இறுதி வரை தொடரும். அதாவது, பல்வேறு தொடர் கதவிலக்கங்கள் உள்ள நிலையில் ஒரு குக்கிராமத்திற்குள் நிலையான வீட்டிற்கான தெருவாரியான (அ) பகுதிவாரியான உள் ஒதுக்கீட்டு முறையானது, ஒரு கிராம ஊராட்சியில் உள்ள பல்வேறு குக்கிராமங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளும் முறை போலவே இருக்கும்.

3) தேர்ந்தெடுக்கப்பட்ட தெருக்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் புதிய கதவிலக்க எண்ணிக்கையின் அடிப்படையில் “ஏறு வரிசையில்” அமைவர்.

4) அடுத்த நிதியாண்டில், ஒரு குறிப்பிட்ட இனத்தினருக்கான வீடுகள், முந்தைய ஆண்டில் பகுதி அளவு மட்டுமே முடிக்கப்பட்ட தெருக்களுக்கு முதலில் உள்ஒதுக்கீடு செய்யப்படும். அதன்பின், நிலையான வீடுகளுக்கான ஒதுக்கீடுகள் மீதம் ஏதுமிருப்பின், அக்குறிப்பிட்ட இனத்தினரின் தகுதியுடைய குடிசைகள் அடுத்து அதிகபட்சமாக எண்ணிக்கையில் உள்ள தெருவிற்கு உள்ஒதுக்கீடு செய்யப்படும். ஒரு கிராம ஊராட்சியில் உள்ள குடிசைகள் அனைத்தும்

இத்திட்டத்தின் கீழ் நிலையான வீடுகளாக மாற்றப்படும் வரையில், இம்முறையே தொடர்ந்து ஆண்டுதோறும் கடைபிடிக்கப்படும்.

***__உதாரணம் 4__ :*** *"க" என்னும் குக்கிராமத்தில் **100** தகுதிவாய்ந்த ஆதிதிராவிடர் குடிசைகள் உள்ளதாக கொள்வோம். இவை மூன்று தெருக்களில், முதல் தெருவில் **50** குடிசைகளும் இரண்டாம் தெருவில் **30** குடிசைகளும், மூன்றாம் தெருவில் **20** குடிசைகளும் பரவலாக உள்ளன.*

***2010–11** இல் கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கான ஒதுக்கீடு இக்குக்கிராமத்தில் **30.** இந்த **30** வீடுகள் தகுதிவாய்ந்த குடிசைகள் அதிகபட்ச எண்ணிக்கையில் **(50)** உடைய முதல் தெருவிற்கு உள்ஒதுக்கீடு செய்யப்படும். முதல் தெருவிற்குள், கலைஞர் வீட்டு வசதித் திட்ட பயனாளிகள் புதிய கதவிலக்க வாரியாக "ஏறுவரிசை" அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

***2011–12**ல் மீண்டும் ஒதுக்கீடு **30** வீடுகளுக்கு இருக்குமெனில், கீழ்க்கண்டவாறு உள்ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். **(அ) 2010–11**ல் பகுதி பணி மட்டுமே முடிக்கப்பட்டுள்ள முதல் தெருவில் மீதம் உள்ள **20** வீடுகளும் முழுமையாகக் கட்டப்படும், மற்றும் **(ஆ)** மீதமுள்ள **10** வீடுகள், தகுதியுடைய ஆதிதிராவிடர் குடிசைகள் அதற்கடுத்து அதிகபட்சமாக உள்ள **2**வது தெருவிற்கு வழங்கப்படும். முதல் மற்றும் இரண்டாவது தெருக்களுக்குள் கலைஞர் வீட்டு வசதித் திட்டப் பயனாளிகள் புதிய கதவிலக்க வாரியாக "ஏறுவரிசை" அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

***__உதாரணம் 5__ :*** *மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரின் நிரந்தரக் குடியிருப்பாக மாற்ற தகுதிவாய்ந்த குடிசைகள் 'ச' குக்கிராமத்தில் **80** உள்ளன. இவை முதல் தெருவில் **30** குடிசைகளும், **2**ஆம் தெருவில் **30** குடிசைகளும், **3**ஆம் தெருவில் **20** குடிசைகளும் என மூன்று தெருக்களில் பரவலாக இருப்பதாகக் கொள்வோம்.*

***2010–11** இல், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு இக்குக்கிராமத்தில் நிரந்தர குடியிருப்புக்களுக்கான ஒதுக்கீடு **30.** இந்த **30** வீடுகள், இரண்டு தெருக்களிலும் உள்ள தகுதிவாய்ந்த குடிசைகளின் எண்ணிக்கை சமமாக உள்ளதால் முதல் தெருவிற்கு **15,** இரண்டாம் தெருவிற்கு **15** என சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும். ஒரு தெருவிற்குள் உள்ள கலைஞர் வீட்டு வசதித் திட்டப் பயனாளிகள்*

*அத்தெருவில் உள்ள புதிய கதவிலக்க எண்ணின்படி ஏறு வரிசையில் தேர்வு செய்யப்படுவர்.*

*2011–12ம் ஆண்டில், ஒதுக்கீடு மீண்டும் 30 வீடுகளாக இருக்கும்பட்சத்தில், இவை முதல் மற்றும் 2ம் தெருக்களுக்கிடையே தெருவிற்கு தலா 15 வீடுகள் வீதம் ஒதுக்கீடு செய்யப்படும். ஒரு தெருவிற்குள், கலைஞர் வீட்டு வசதித் திட்ட பயனாளிகள் தேர்வு, புதிய கதவிலக்க எண் அடிப்படையில் ஏறு வரிசையில் அமையும்.*

(iv) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால், தேசிய தகவல் மைய அதிகாரிகள் உதவியுடன் இணையதளம் அடிப்படையிலான மென்பொருள் உருவாக்கப்படும். இம்மென்பொருள், கிராம ஊராட்சிகளுக்கிடைய கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நிலையான வீடுகளுக்கான ஒதுக்கீட்டையும், பல்வேறு பிரிவினர், குக்கிராமங்கள் மற்றும் தெருக்களுக்கிடையேயான உள்ஒதுக்கீட்டையும், மற்றும் தனிநபர் பயனாளிகள் தேர்வையும் தானியங்கியாகச் செய்யும் வகையில் அமைக்கப்படும்.

**6. மாதிரி வடிவமைப்பு மற்றும் அலகுத் தொகை :**

இந்திரா நினைவுத் திட்டக் குடியிருப்புகளைப் போல கலைஞர் வீட்டு வசதித் திட்ட வீடுகளும் கான்கிரீட் கூரைகளுடன் தனியான கழிவறையுடன் கட்டப்படும். ஒவ்வொரு வீடும் குறைந்தபட்சம் 200 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாகவும் ஒவ்வொரு வீட்டிற்கும் அலகுத் தொகை ரூ.60,000/– எனவும் இருக்கும். வாய்ப்புள்ள இடங்களில், இத்திட்டத்தின்கீழ் கழிவறை அமைக்க, முழு சுகாதார திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகையினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கலைஞர் வீட்டு வசதித் திட்ட வீடுகளை வேறுபடுத்திக்காட்ட இத்திட்டத்திற்கென தனி மாதிரி வடிவமைப்பு தயாரிக்கப்படும். ஒவ்வொரு வீட்டின் முகப்பிலும், இத்திட்டத்திற்கான சின்னம் மற்றும் பயனாளியின் பெயர் வண்ணம் தீட்டப்படும். முடிவுற்ற ஒவ்வொரு வீட்டின் முகப்பிலும் திட்டத்தின் பெயர், கட்டப்பட்ட ஆண்டு மற்றும் பயனாளியின் பெயர் ஆகியவை எழுதப்பட வேண்டும். குறைந்த விலை கட்டுமான தொழில்நுட்பமும் அதிவிரைவு கட்டுமானமும் இத்திட்டத்தில் அனுமதிக்கப்படும்.

**7. திட்டச் செயலாக்கம் :**

ஒவ்வொரு வருடத்திற்கும், வருடாந்திர ஒதுக்கீட்டிற்கேற்ப, இத்திட்டத்திற்கான நிர்வாக அனுமதி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் வழங்கப்படும். இத்திட்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) மூலம் செயல்படுத்தப்படும். இந்திரா நினைவு

குடியிருப்புத் திட்டத்தைப் போலவே, இத்திட்டத்தின் கீழும் பயனாளிகள் தங்கள் வீடுகளை தாங்களாகவோ (அல்லது தங்களின் முகவர்கள் மூலமாகவோ) கட்டிக் கொள்வார்கள். மேலும் இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக்கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் ஏதும் கோரப்படமாட்டாது.

**8. திட்டத்திற்கான நிதி விடுவித்தல் :**

இந்தத் திட்டத்திற்கு தேவைப்படும் வருடாந்திர ஒதுக்கீட்டினை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கீழ்க்கண்டவாறு காலாண்டிற்கு ஒரு முறை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க அனுமதிக்கப்படுகிறார் :–

(அ) ஒவ்வொரு நிதியாண்டிலும் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டின் நான்கில் ஒரு பகுதியை, முதல் காலாண்டு நிதியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தாமாகவே பெறுவார்.

(ஆ) ஆனால், 2வது, 3வது மற்றும் 4வது காலண்டிற்கான நிதியை, அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஆகியோர் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் பெறுவார். இவ்வதிகாரமளிக்கப்பட்ட குழுவின் கூட்டுநர் (convenor) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநராவார்.

மேற்படி நிதி, மாவட்டங்களால் நேரடியாகச் சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சிக்கு விடுவிக்கப்படும். ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் இந்நிதி விடுவிக்கப்படக்கூடாது.

மாவட்ட ஆட்சியர்/பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களால் மாவட்ட அளவில் கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்கென தனி சேமிப்புக் கணக்கு, மாவட்ட தலைநகரங்களில் துவக்கப்பட வேண்டும். மாவட்ட அளவில், கலைஞர் வீட்டு வசதித் திட்டத்திற்கென ஒரு தனி சேமிப்புக் கணக்கு மட்டுமே இருக்க வேண்டும்.

அரசாணை நிலை எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி4) துறை, நாள் 17.08.2007 மற்றும் அரசாணை நிலை எண்.180, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா1) துறை, நாள் 01.12.2008ல் திருத்தியமைத்துள்ளபடி, ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் பராமரிக்க வேண்டிய 4 விதமான கணக்குகள் மற்றும் அவற்றை செயல்படுத்த தெளிவான நடைமுறைகள் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளன. தற்பொழுது அரசாணை நிலை எண்.62, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா 1) துறை, நாள் 27.05.2010ன்படி, கலைஞர் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படும். ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் **ஐந்தாவதாக "கிராம ஊராட்சி கலைஞர் வீட்டு வசதித் திட்டக் கணக்கு"** என்ற பெயரில் தனியாக வங்கிக் கணக்கு பராமரிக்கப்படும். இச்சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டிய இனங்கள், செலவு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட இனங்கள், கிராம ஊராட்சி – கலைஞர் வீட்டு வசதித் திட்டக் கணக்கினை நடைமுறைப்படுத்தும் விதம் பின்வருமாறு :

**(அ) வரவுகள்**

கலைஞர் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட நிதி, கிராம ஊராட்சி கலைஞர் வீட்டு வசதித் திட்டக் கணக்கின் கீழ் வரவு வைக்க வேண்டும்.

**(ஆ) செலவினங்கள்**

கிராம ஊராட்சி – கலைஞர் வீட்டு வசதித் திட்ட கணக்கில் வரவு வைக்கப்பட்ட நிதி, கலைஞர் வீட்டு வசதித் திட்டம் தொடர்பான பணிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளபடி செலவிடப்பட வேண்டும்.

**(இ) திட்ட செயலாக்கம்**

இந்தத் திட்டக் கணக்கு, கிராம ஊராட்சிக் கணக்கை பராமரிப்பது போல கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் உபதலைவரால் இணைந்து பராமரிக்கப்படவேண்டும். இருப்பினும், மாவட்ட ஆட்சித் தலைவர், சம்மந்தப்பட்ட வங்கி கிளைகளுக்கு தகுந்த பேரேடு/ கணினி பதிவுகள் மேற்கொள்ளவும், சம்மந்தப்பட்ட கிராம ஊராட்சியின் கலைஞர் வீட்டு வசதித் திட்டக் கணக்கிலிருந்து பணிகளுக்கான தொகைகளை வழங்க வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி) தகுந்த செயல்முறை ஆணைகள் இணைக்கப்பட்டால் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் வங்கிகளில் தாக்கல் செய்யப்படும் கிராம ஊராட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவர்களால் கையெழுதிடப்பட்ட காசோலைகள் அங்கிகரிக்கப்படவேண்டுமென, எழுத்து மூலமான அறிவுரைகள் வழங்கிட வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு காசோலையும் “வட்டார வளர்ச்சி அலுவலரின் (வட்டார ஊராட்சி) செயல் முறை ஆணைகள் இணைக்கப்பட்டால் மட்டுமே தொகை வழங்கப்பட வேண்டும்'' என்ற முத்திரை தாங்கி இருக்க வேண்டும். “தனக்கு என காசோலைகள்'' (self cheques) அல்லது தொகை மீளப்பெறுவதற்கான படிவங்கள் (withdrawal forms) வழியாக இக்கணக்கின் கீழ் தொகை பெற அனுமதிக்கக்கூடாது.

**9.** அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அவர்களை கலந்தாலோசித்து சூழ்நிலைக்கேற்ப இந்த தெளிவுரைகளை மாற்றிட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்

/ உண்மை நகல் /

பிரிவு அலுவலர்